டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 28.12.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 158 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# பருத்தியால் செய்யப்பட்ட தீ தடுப்பு துணி

## மதுரையில் விவாத நிகழ்ச்சி நடைபெற்றது

புது தில்லி, டிச.27

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் மதுரை கிளை ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் – இந்திய தரநிலை ஐ எஸ் 18931:2024 – பருத்தியால் செய்யப்பட்ட தீ தடுப்பு துணி மனிதனால் உருவாக்கப்பட்ட இழைகள் மற்றும் அவற்றின் கலவைகள் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சியை 26.12.24 அன்று நடத்தியது. இந்த கூட்டத்தில் விவசாயிகள், நெசவாளர்கள், தொழில் துறையினர், பருத்தி ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர்கள்,



கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமி, விருதுநகர் சேது தொழில்நுட்பக் கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என 41 பேர் கலந்து கொண்டனர்.



ஐ எஸ் 18931: 2024 என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட பருத்தி இழைகள்/ இழைகள் மற்றும் அவற்றின் கலவைகளால் செய்யப்பட்ட தீ தடுப்பு துணிக்கான செயல்திறன் தேவைகளைக் குறிப்பிடுகிறது.

எண்ணெய் மற்றும் எரிவாயு, வாகனம், விமானம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட அதிக ஆபத்துள்ள பல்வேறு தொழில் துறைகளின் தொழிலாளர்களுக்கு ஆடை தயாரிப்பில் பயன்படுத்தப்படும் துணிகளுக்கு இது பொருந்தும். இந்தத் தரநிலையில் வெப்ப எதிர்ப்பு, வரையறுக்கப்பட்ட தீப்பிழம்பு பரவல், வெப்ப பரிமாற்ற செயல்திறன், இழுவிசை வலிமை, பிரித்தெடுக்கும் வலிமை, வெடிப்பு வலிமை, பரிமாண மாற்றம் ஆகியவை அடங்கும்.

பிஐஎஸ் மதுரை கிளை அலுவலகத்தின் மூத்த இயக்குநரும் தலைவருமான சு.த.தயானந்த் வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியின் நோக்கங்களை விளக்கினார். முதன்மை விருந்தினராக, பங்கேற்ற ஓய்வுபெற்ற பேராசிரியர் (வேளாண்மை இயல்) டாக்டர் அ.முத்து சங்கர்நாராயணன் தொடக்கவுரையாற்றினார். பல்வேறு தொழில்களில் பருத்தியின் பயன்பாடுகள், பருத்தி வகைகள் மற்றும் ஜவுளித் தொழிலில் பயன்படுத்தப்படும் நூல்கள் குறித்தும் விவரித்தார். பூச்சியியல் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் டாக்டர் என்.முருகேசன், பருத்தி ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்தும், பூச்சித் தாக்குதலை எதிர்க்கும் பருத்தி வகைகள் மற்றும் அவற்றின் பல்வேறு பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் எம்.ராஜு சிறப்புரையாற்றினார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிறுவன மாணவர்களின் நலனுக்காக பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய தர நிர்ணய அமைவனம் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்கு நன்றி கூறினார். நிகழ்ச்சியை ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் டாக்டர் தங்கபாண்டியன் ஒருங்கிணைத்தார்.

பருத்தியால் செய்யப்பட்ட ஐ எஸ் 18931:2024 தீ தடுப்பு துணி மனிதனால் உருவாக்கப்பட்ட இழைகள், அவற்றின் கலவைகள் – பொது மற்றும் செயல்திறன் தேவைகள் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் பற்றிய ஆழமான விளக்கக்காட்சியை பிஜஎஸ்




மதுரை கிளை இணை இயக்குநர் ஹேமலதா பி.பணிக்கர் வழங்கினார்.

விளக்கக்காட்சிக்குப் பிறகு, விரிவான திறந்தவெளி விவாதம் நடைபெற்றது. இந்திய தரநிலை தொடர்பான சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. நைலானைப் பயன்படுத்தி தீயை எதிர்க்கும் பஞ்சு தயாரிப்பது குறித்தும் டாக்டர் என்.முருகேசன் விளக்கினார். பங்கேற்பாளர்கள் இந்திய தரநிலைகள் மற்றும் பருத்தி துணிகள் தொடர்பான கருத்துகள் மற்றும் தொழில்நுட்ப வினவல்களை எழுப்புவதற்கும், இந்திய தரநிலைகளை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும் பிஜஎஸ் ஊக்குவிக்கிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க அழைப்பு

விருதுநகர், டிச.27

வேளாண்மை துறை சார்பில் ஆண்டுதோறும் மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவினால் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டு வருகின்றன. போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெரும் விவசாயிகளுக்கு ரூபாய் 5 லட்சம் பரிசுத் தொகை மற்றும் ரூபாய் 7000 மதிப்புள்ள தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படி போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும். நில உரிமைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். 50 சென்ட் அளவில் பயிர் அறுவடை மேற்கொள்ளப்படும்.

மேலும் இப்போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் ரூபாய் 150 பதிவு கட்டணம் செலுத்த வேண்டும். ஒரு முறை பரிசு பெறும் விவசாயி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு போட்டியில் கலந்து கொள்ள இயலாது. அறுவடை செய்யும் தேதியை 15 நாட்களுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனருக்கு தெரிவிக்க வேண்டும். மாநில அளவில் நடைபெறும் இப்போட்டியில் வெற்றியாளர்களை அறிவிப்பதில் சென்னை வேளாண்மை இயக்குனர் தலைமையிலான மாநில அளவிலான குழு இறுதி முடிவு எடுக்கும்.

எனவே விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடியில் ஆர்வமுள்ள விவசாயிகள் இப்போட்டியில் கலந்து கொண்டு பயனடைய சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 27.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 40 | 44 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 16 | 19 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 16 | 19 | 60 | கேரட் | 54 | 58 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 66 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 48 | 52 |
| 7 | பீர்க்கன் | 48 | 54 | 63 | டர்னிப் | 38 | 42 |
| 8 | சுரைக்காய் | 28 | 32 | 64 | மு.கோஸ் | 25 | 28 |
| 9 | பாகற்காய் | 35 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 90 | 100 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 295 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 38 | 44 | 69 | இஞ்சி | 46 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 48 | 54 | 70 | புருக்கோலின் | 140 | 170 |
| 15 | சி.வெங்காயம் | 58 | 62 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 74 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 36 | 72 | குடமிளகாய் | 52 | 56 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 55 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | | | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 70 | 75 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 75 | 78 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 40 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 46 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 10 | 12 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | | |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |
| 55A | துவரை | | | | | | |

# நாளந்தா வேளாண்மைக் கல்லூரியில் தேசிய விவசாயிகள் தினம் மற்றும் வேளாண் கண்காட்சி நடைபெற்றது

திருச்சி, டிச.27

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், எம்.ஆர்.பாளையம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இணைவுப்பெற்று நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு விவசாயிகளுக்கு வெவ்வேறு துறைகளின் வேளாண் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. பயிற்சிகளாவது தேனீ வளர்க்கும் முறைகள் மற்றும் அதன் மேலாண்மை பற்றி பூச்சியியல் துறை வல்லுநர் முனைவர். டீ. கனகராஜ் மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தைப் பற்றி மண்ணியல் துறை வல்லுநர் யு. விக்னேஷ்வர்ராஜ் மற்றும் காய்கறி தோட்டம் அமைக்கும் முறைகளும் அதன் அவசியங்களைப் பற்றி தோட்டக்கலைத்துறை வல்லுநர் னு.தமிழ்பாவை ஆகியோர் விரிவாக பயிற்சி அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கி வரும் வாய்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர் களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் லால்குடியில் இயங்கி வரும் கிளாசிக் புட்ஸ் நிறுவனத்தின் சார்பாக சிறுதானியத்தில் மதிப்புக்கூட்டப்பட்ட சுமார் 50க்கும் மேற்பட்ட உணவுகள் கண்காட்சியில் வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விவசாயிகள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சுமார் 300க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் தாளாளர் அல்லி இங்கர்சால், கல்லூரியின் முதல்வர் (பொ) முனைவர். டீ. குணா மற்றும் கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலக பணி யாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கும்பளம் கிராமத்தில் ராபி பருவம் குறித்த விவசாயிகள் பயிற்சி



கிருஷ்ணகிரி, டிச.26

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான கும்பளம் கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.



இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் நாராயணம்மா அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், கால்நடை உதவி மருத்துவர் வினோத், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கிருஷ்ணே கவுடு, உதவி தோட்டக்கலை அலுவலர் திருமுருகன், உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது, கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங்களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார். இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார். கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன் கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

கால்நடை மருத்துவர் வினோத், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கிருஷ்ணே கவுடு ஆகியோர் தம் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள்.

உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வி நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க்சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் திருமுருகன் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவசமாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் நாராயணம்மா நம் கும்பளம் ஊராட்சிக்கு அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடைய வேண்டும் என்று கூறினார். இறுதியாக இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது.




இப்பயிற்சியில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர். மேலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம. முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் சொட்டுநீர் பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்.

உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெல்லில் வயல் சூழல் ஆய்வு



சேலம், டிச.27

சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மைத்துறையின் கீழ் இனாம் பைரோஜி முன்னோடி விவசாயி வேலு வயலில் நெற் பயிரில் வேளாண் சூழலில் வயல் பகுப்பாய்வு குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

சேலம் உயிரியல் கட்டுபாட்டு ஆய்வக வேளாண் அலுவலர் கே.கவிதா பயிற்சியாளராக கலந்து கொண்டு நெல்லில் தீமை செய்யும் பூச்சிகளான இலைப்பேன், இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், நெல் கூண்டுப்புழு , ஆணைகொம்பன் உள்பட அனைத்து பூச்சிகளை கண்டறியும் முறைகள் தாக்குதல் அறிகுறிகள் குறித்து எடுத்து கூறினார். நன்மை செய்யும் ஊசித்தட்டான், தேனீக்கள், பொறி வண்டுகள், குளவிகள் உள்பட அனைத்து பூச்சிகளை கண்டறியும் முறைகள் குறித்தும் எடுத்து கூறப்பட்டது.

விவசாயிகள் மேற்கண்ட நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை சேகரம் செய்து கலர் வண்ண அட்டையில் மாதிரி படங்களை வரைந்து நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை கணக்கிப்பட்டது. இலை சுருட்டுப்புழு எண்ணிக்கை சற்று அதிகமாக காணப்பட்டதால் ஒரு ஏக்கருக்கு டிரைகோகிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணி 40000 என்ற அளவில் வயலில் கட்டி கட்டு படுத்தலாம் என்று முடிவு எட்டப்பட்டது.

உயிர் உரங்கள் அசாஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா மற்றும் உயிரியல் கட்டுபாட்டுக்காரணிகள் டிரைகோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ் பயன்கள் பயன் படுத்தும் முறைகள் குறித்தும் எடுத்து கூறப்பட்டது. வயல்வெளிகளில் விளக்குப்பொறி, இனக்கவர்ச்சி பொறி மாறும் டி வடிவ குச்சிகள் பயன்படுத்தி அந்துபூச்சிகளை கவர்ந்து கொல்லுதல், வரப்பு பயிர், பயிர் சுழற்சி முறைகளை பயன் படுத்துதல் குறித்து எடுத்து கூறப்பட்டது.

வேளாண்மை அலுவலர் த.நிவேதாஸ்ரீ , உதவி வேளாண்மை அலுவலர் ஆ.குமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பட்டாம் பூச்சி (BUTTER FLY) பற்றி தெரிந்து கொள்ளுவோம்!



விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் பட்டாம் பூச்சியை பார்த்து தங்களுடைய பாயையிலே, 'பாப்பாத்தி பறக்குது' என்பார்கள். இதில் நன்மை, தீமை செய்ய கூடிய வகைகள் உள்ளன.

கிட்டத்தட்ட 20,000க்கும் மேற்பட்ட பட்டாம் பூச்சி (PATTAM POOCHI) வகைகள் உள்ளன. இவை லெபிடோப் டெரா (LEP-IDOPTERA) வரிசையில் வரும் பூச்சிகள். இதில் அந்து பூச்சிகளும் அடங்கும். உலகிலேயே ஏறக்குறைய 119 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய உயிரினம் தான் இந்த பட்டாம் பூச்சி.

பூச்சியினங்களில் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் இயற்கையின் அழகான படைப்பு தான் பட்டாம் பூச்சி. இன்று கூட பட்டாம் பூச்சியை பார்த்து விட்டால் அதை பிடிப்பதற்கு வயது வித்தியாசமின்றி (இளைஞர்கள் / முதியவர்கள்) அதன் பின்னாலே ஓடி வரும் கூட்டத்தை பார்த்திருப்போம்.

**இப்படிப்பட்ட பரவசமுட்டும் பட்டாம் பூச்சியை பற்றிய சில தகவல்களை தெரிந்து கொள்ளுவோமா?**

**பட்டாம் பூச்சியின் வாழ்க்கை வரலாறு**

முட்டை – லார்வா – பியூபா – முதிர்ந்த பட்டம் பூச்சி என 3 முதல் 4 வாரங்களில் வாழ்ந்து முடிந்து விடும்.

**உடலைமைப்பு 3 பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளன.**

1) தலை பகுதி (மேல் உடல்பகுதி)

2) மார்பு (நடுத்தர உடல்பகுதி வயற்று பகுதி)

3) வால்முனை / கடைசி உடல் பகுதி

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மேலும் தலை பகுதியில் இரண்டு ஆண்டெனாக்களும் ஒரு எக்ஸோ ஸ்கெல்டினும் இணைக்கப்பட்டுள்ளன. பட்டாம் பூச்சி கால்களால் தான் சுவைகளை அறிந்து கொள்ளுகின்றன. பெண் பூச்சி முட்டை இடுவதற்கான சூழ்நிலையில் உள்ள இடங்களை தன்னுடைய தலையில் உள்ள ஸ்பரிச உறுப்புகளும் உணர்கொம்புகளும் வாசனை முகர்ந்து தேடி கண்டுபிடிக்கிறது.

பொதுவாக பட்டாம் பூச்சி கறிவேப்பிலை, எலுமிச்சை வகை செடிகள், சர்க்கரை வள்ளி கிழங்கு போன்ற செடிகளில் அதிகமாக காணப்படும்.

**உலகிலேயே பெரிய பட்டாம் பூச்சி எது?**

உலகின் மிகப்பெரிய பட்டாம் பூச்சி பப்புவா நீயூகினியா நாட்டிலே உள்ள குயின் அலொக்ஸாண்டிரியாவாகும்.




அதுபோல இந்தியாவின் மிகப்பெரிய பட்டாம் பூச்சி ‘சதர்ன் போட்விப் ‘ என்பதாகும். இந்தியாவின் மிக சிறிய பட்டாம் பூச்சியாக ‘ஓரிண்டல் கிராஸ் ஜவல்‘ யாகும். இவை இரண்டுமே மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்க தகவல்.

**தமிழகத்தின் மாநில பட்டாம் பூச்சி எது தெரியுமா?**

தமிழகத்தின் மாநில பட்டாம் பூச்சியாக ‘தமிழ் மறவன்‘ என்ற (மலைச்சிறகன்) சூலை 2019யில் தமிழக அரசால் தேர்ந் தெடுக்கப்பட்டது நாம் அறிந்ததே. இதனுடைய ஆங்கில பெயர் (TAMIL YEOMAN) பட்டாம் பூச்சி நம்முடைய வீட்டுக்கு வந்து போனால் அதிர்டம் என்கிறார்கள் நம்முடைய முன்னோர்கள். இது நமக்கு நல்ல செய்தியை கொண்டுவருவதாக ஒரு நம்பிக்கை நம்முடைய விவசாயிகளிடத்தில் உள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# விவசாயிகளுக்கு கொசுத்தேனீ வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது



வேலூர், டிச. 27

உன்னட் பாரத் அபியான் (UBA) திட்டத்தின் வாயிலாக விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், பாலாறு வேளாண்மைக்கல்லூரி சார்பில் வேலூர் மாவட்டத்தில் உள்ள பல்லாலகுப்பம் கிராமத்தில் விவசாயிகளுக்கு இலவச கொசுத்தேனீ வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் Y.ஹரி பிரசாத் தொடங்கி வைத்து, தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். சிறப்பு விருந்தினராக பேரணாம்பட்டு ஒன்றிய துணை வேளாண் அலுவலர் R.உமாசங்கர் பங்கேற்று விவசாயிகளுக்கு சிறப்புரை வழங்கினார்.

இந்த பயிற்சியை கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சார்ந்த முன்னணி தேனீ வளர்ப்பு நிபுணர் G.செல்வகுமார் வழி நடத்தினார். அவர் தேனீக்களின் பராமரிப்பு, அவை சந்திக்கும் பொதுவான பிரச்சனைகள் மற்றும் அவற்றிற்கு தீர்வுகள் குறித்து விளக்கம் அளித்தார். பின்னர் பாலாறு வேளாண் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் முனைவர் கு.செல்வம், முனைவர் கு.விக்னேஷ் மற்றும் S.V.பிரபு ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

பயிற்சியின் போது செயல் விளக்க உதவிகளை S.பத்பநாபன், S.பிரீத்தி, வேளாண் மாணவர்கள் சத்ரியன் மற்றும் தவதர்சன் மேற்கொண்டனர். பயிற்சி முடிவில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், பயிற்சியின் மூலம் பல புதிய தகவல்களை அறிந்ததாகவும், தங்கள் விவசாயத்தில் தேனீ வளர்ப்பை இணைத்து வருமானத்தை அதிகரிக்க முனைவதாகவும் தெரிவித்தனர். மேலும் இவ்வகை பயிற்சிகள் எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்தப்படும் என கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. விவசாயிகள் மற்றும் ஆர்வலர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயறுவகைப் பயிர்களில் தழைச்சத்தை நிலை நிறுத்துவதில் ரைசோபியத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள்!

பயறுவகைப் பயிர்கள் (லெகுமினேசியே குடும்பத்தைச் சார்ந்தவை) 'ரைசோபியம் என்ற நுண்ணுயிர் கூட்டுச் சேர்க்கையின் மூலம் தழைச்சத்தினை பெற்று விடுகின்றன. இதன் மூலம் இவை தழைச்சத்தினை நிலை நிறுத்தி நிலத்தினை வளப்படுத்தி பயிரின் வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன.

பயறுவகைப் பயிர்கள் ரைசோபியத்திற்கு உணவும், உறைவிடமும் அளிக்கின்றன. மாற்றாக இவை தழைச்சத்தினை வழங்குகின்றன. இதன் மூலம் பயறுவகைப் பயிர்களும், ரைசோபியமும் இணைமாற்று வாழ்க்கை வாழ்ந்து இரு உயிர்களும் பயன்பெறுகின்றன. வேர்முண்டுகள் விதைத்த 10-20 நாட்களில் தோன்றி பயிர் பூக்கும் தருணத்தில் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றது. பின்னர் நாளடைவில் இவை சிதைந்து மண்ணிற்கு வளம் சேர்க்கின்றன. இப்பாக்டீரியவானது வேர்முடிச்சுக்களில் தழைச்சத்தினை நிலை நிறுத்தி வைக்கின்றன. திறன்மிக்க பயனுள்ள முடிச்சுகள் பெரிதாகவும், இளஞ்சிவப்பு நிறமாகவும் காணப்படும். பயனற்ற முடிச்சுகள் வெண்மையான நிறத்தில் அளவில் சிறியதாகவும் காணப்படும்.

### உபயோகிக்கும் முறை

ரைசோபியத்தை விதை நேரத்திக்கு பயன்படுத்துவதே சாலச்சிறந்தது. மண்ணில் இடும்போது இவை வேர் மண்டலத்தை அடைந்து வேர்முடிச்சுகளை உருவாக்கும் செயலானது சரிவர நடைபெற இயலாது. 50 மி.லி. திரவ நுண்ணுயிர் உரத்தை அரிசிக்கஞ்சியுடன் சேர்த்து ஒரு ஏக்கருக்கான விதையுடன் நன்கு கலக்க வேண்டும். கலந்த விதைகளை 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி பிறகு விதைக்கலாம்.

### பரிந்துரைக்கப்படும் பயிர்கள்

துவரை, கொண்டைக்கடலை, சோயா, மொச்சை, நிலக்கடலை, கொள்ளு மற்றும் அனைத்து பயறுவகைப் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

பல்வேறு வகை பசுந்தாள் உரப்பயிர்களும் தீவனபயிர்களும், ரைசோபியம் வேர்முடிச்சுகளை உண்டாக்கி தழைச்சத்தை நிலைநிறுத்துவதால் தழைச்சத்து அதிகமாகக் உரப்பயிர் களுக்கும் மற்றும் கிடைக்கிறது. ஆகையால் இதனை பசுந்தாள் உரப்பயிர்களுக்கும் மற்றும் தீவனப்பயிர்களுக்கும் இட்டு பயன் பெறலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.சாகுல் அமீத் தெரிவித்தார்.



# மார்கழி, தை பட்ட உளுந்து மற்றும் பச்சை பயறுகளில் இரகங்களின் தேர்வும் விதைப்பரிசோதனையின் அவசியமும்

தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் மார்கழி, தை பட்டங்களில் உளுந்து பயிர்கள் பெருவாரியாக சாகுபடி செய்யப்படுகிறது. உளுந்து மற்றும் பச்சை பயறு பயிர்கள் குறுகிய காலத்தில் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானத்தை ஈட்டித் தருவதால் இப்பகுதி விவசாயிகளிடையே முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களாக கருதப்படுகிறது.

எனவே விவசாயிகள் மார்கழி, தை பட்டத்திற்கு உகந்த தரமான விதை இரகங்களைத் தேர்ந்தெடுத்து விதைப்பது அவசியமாகும். உளுந்து பயிரில் ஆடுதுறை 3, ஆடுதுறை 5, ஆடுதுறை 6, வம்பன் 8, வம்பன் 10 மற்றும் வம்பன் 11 ஆகிய இரகங்களும் பச்சைப்பயரு இரகங்களான ஆடுதுறை 3 கோ(ஜிஜி) 7, கோ 8, ஆகிய இரகங்களும் இப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விளைச்சலுக்கு பயிர் சாகுபடி பருவம் பருவத்திற்கேற்ற பயிர் மற்றும் விதை இரகத்தேர்வு மற்றும் விதைத்தரம் ஆகிய மூன்றும் கவனிக்க வேண்டிய அம்சங்களாகும்.

தரமான விதைகளைப் பொறுத்த வரை குறைந்த பட்ச முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை, பிற இரக கலவன் மற்றும் பிற பயிர் விதைகள் இன்றி இருத்தல் அவசியம். தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்பு மேற்கொள்ளும் போது விதைக்கான செலவை குறைத்து பரிந்துரைக்கப்பட்ட விதையளவை பயன்படுத்துவதுடன், வயலில் உகந்த பயிர் எண்ணிக்கை, பூச்சி மற்றும் நோயிலிருந்து பயிர் பாதுகாப்பு, அதிக மகசூலுடன் கூடிய வருவாய் விவசாயிகள் பெறமுடியும். எனவே விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் சாகுபடி செய்ய உள்ள மார்கழி, தைப்பட்ட உளுந்து மற்றும் பச்சை பயிறு பயிர்களில் விதை முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் பரிசோதனை செய்து விதைப்பு செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

உளுந்து மற்றும் பச்சை பயிறு பயிருக்கு முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் அறிந்து கொள்ள தங்களிடம் உள்ள விதைகளில் பணி விதை மாதிரிகளாக 100 கிராம் விதை மாதிரி எடுத்து தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் தஞ்சாவூர் காட்டுத்தோட்டத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும். திருவாரூர் மாவட்ட விவசாயிகள், திருவாரூர். விஜயபுரம், பெரிய மில் தெருவில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்திலும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் நாகப்பட்டினம், வெளிப்பாளையம், 15 காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்திலும் தங்கள் முழு முகவரியுடன், விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) பகுப்பாய்வு கட்டணமாக செலுத்தி முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக விவசாயிகள் விதை விற்பனையாளர்களிடம் விதைகளை வாங்கும்பொழுது தமிழ்நாடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை மூலம் சான்றளிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு விதையின் காலக்கெடு நடப்பில் உள்ளதையும் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தஞ்சாவூர் விதைப் பரிசோதனை அலுவலர் சிவ வீரபாண்டியன் தெரிவிக்கின்றார்.



# மாவட்ட அளவிலான தேனீ வளர்ப்பு கருத்தரங்கம்

புதுக்கோட்டை, டிச.27

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தில் மாவட்ட அளவிலான தேனீ வளர்ப்பு கருத்தரங்கம் 23 மற்றும் 24.12.24 ஆகிய நாட்களில் நடைபெற்றது.



இக்கருத்தரங்கின் துவக்க விழாவில் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆ.யுவராஜா வரவேற்புரையாற்றினார். பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா. ரமேஷ் இக்கருத்தரங்கின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். திருவரங்குளம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சி.க.குமார், தேனீ வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த கையேட்டை வெளியிட்டு தலைமையுரையாற்றினார்.

வேளாண்மைத் துணை இயக்குநர் (விற்பனை மற்றும் வணிகம்) இரா.ஜெகதீஸ்வரி, தேனீ வளர்ப்பிற்கும், சந்தைப்படுத்துதலுக்கும் வேளாண்மைத் துறையின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.வெற்றிவேல் வாழ்த்துரை வழங்கினார்.

தேனீ இனங்கள் மற்றும் தேனீ வளர்ப்பு முறை குறித்து மதுரை வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சி.சுரேஷ், தேனீ வளர்ப்பில் நீங்களும் தொழில்முனைவோர் ஆகலாம் என்ற தலைப்பில் அரியலூர் விஸ்வஜித் தேனீப் பண்ணை நிறுவனர் முனைவர் க.பாரதிதாசன், தேனீ வளர்ப்பில் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றிற்கான தீர்வுகளும் என்ற தலைப்பில் திருவரங்குளம் நிஷா இயற்கை வேளாண் பண்ணை நிஷா மைதீன், தொழில்நுட்பவுரை யாற்றினார்கள்.

உணவு தானிய உற்பத்தியில் தேனீக்களின் பங்கு குறித்து வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆ.யுவராஜா, தேனீ வளர்ப்பை ஊக்கப் படுத்தும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் குறித்து




உழவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சு.ப.மாரிமுத்து, தேனீயைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்து பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ், மதுரம் மகரந்தம் தரும் பயிர்கள் குறித்து மரபியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கி.தியாகு, தேனில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து உணவு மற்றும் ஊட்ட சத்தியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா தொழில்நுட்ப உரையாற்றினார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வாக திருவரங்குளம் அருகேயுள்ள வேப்பங்குடி நிஷா இயற்கை வேளாண் பண்ணையில் தேனீக் களின் செயல்பாடுகள், தேனீப் பெட்டிகள் பராமரிக்கும் விதம் குறித்து விவசாயிகளுக்கு நேரடியாக களப்பயிற்சி அளிக்கப்பட்டது. பின்பு நிறைவு விழாவில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# ஆலங்குடி அருகே குறுந்தடிமனையில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது

புதுக்கோட்டை, டிச.27

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே குறுந்தடிமனை கிராமத்தில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, வேங்கிடாக்குளம் மருந்தகம் மற்றும் ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம் முகாமில், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறையின் கால்நடை உதவி மருத்துவர் ஆர்.பாவை சிகிச்சை அளித்தார், கால்நடை மருத்துவ ஆய்வாளர் சிவகுமார் மற்றும் மருத்துவ உதவியாளர் ஆர்.எம்.டி. வடிவேல் ஆகியோர் சிகிச்சைக்கான ஏற்பாடு செய்தனர். ரிலையன்ஸ் பவுண்டேசன் மாவட்ட மேலாளர் ஆர்.அன்பழகன் முகாமினை ஒருங்கிணைத்திருந்தார்.

இம்முகாமில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி மற்றும் கால்நடைகளுக்கான சினைப் பரிசோதனை செய்து, சினைப் பருவம் வராத மாடுகளுக்கு சிறப்பு மருத்துவமும், பருவத்தில் இருந்த மாடுகளுக்கு சினை ஊசிகளும் செலுத்தப் பட்டது. மேலும் இவ்வகாமில் குடல் புழு நீக்க மருந்துகள், சத்து இணை உணவுகள், கால்நடைகளின் காயங்களுக்கு மருந்துகள் போன்றவை வழங்கப்பட்டன.

சிறந்த முறையில் கால்நடை வளர்ப்பிற்கான ஆலோ சனைகள் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கான அரசு திட்டங்கள் பற்றியும் விவசாயிகளு விரிவாக விளக்கப்பட்டது. முகாமின் நிறைவில் முன்னோடி விவசாயி செல்வி நன்றி கூறினார்.



# வெண்மை புரட்சியும் பால் பெருக்கமும் – ஓர் பார்வை

தொழில்முனைவோர் என்றாலே பெரிய செல்வந்தர்களையும் பன்னாட்டு நிறுவனங்களை நடத்துபவர்களும் மட்டுமே நம் கண்ணுக்குத் தெரியும். ஆனால் கிராமப்புறத்தில் உள்ள சிறிய பால் உற்பத்தியாளர்களை அடையாளம் கண்டு அவர்களை நம் சமூகத்தின் தொழில் முனைவோர்களாக மாற்றிய சிற்பி, நமது வெண்மை புரட்சிக்கு வித்திட்டவருமான வர்கீஸ் குரியன் அவர்களே. அவரது நூற்றாண்டு விழா இந்த வருடம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நமது நாட்டின் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட டாக்டர் வர்கீஸ் குரியன் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 26 அன்று ஆண்டு தோறும் தேசிய பால் தினம் என கொண்டாடப்படுகிறது.

உலகளவில் வருடத்திற்கு 950 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில் மட்டும் ஆண்டிற்கு 230.6 மில்லியன் டன் (2023-24) பால் உற்பத்தி செய்யப்பட்டு, பால் உற்பத்தியில் இந்தியா உலகளவில் முதலிடத்தில் உள்ளது. இதில் நம் தமிழகத்தில் மட்டும் ஆண்டிற்கு 10.3 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டில் பதினொன்றாவது இடத்தில் உள்ளது. வருடத்திற்கு 36.2 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து, உத்திர பிரதேசம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நம் நாட்டில், சராசரியாக ஒரு தனிமனிதனுக்கு ஒரு நாளுக்கு 459 கிராம் பால் கிடைக் கின்றது. இந்த தனி நபர் அளவானது பஞ்சாபில் அதிக பட்சமாக 1283 கிராமாகவும், நம் தமிழகத்தில் 369 கிராமாகவும் உள்ளது.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலில், 98 சதவீதம் கிராமப் புறங்களிலிருந்தும், 2 சதவீதம் நகர்ப்புறங்களிலிருந்தும் கிடைக் கிறது. மொத்த பால் உற்பத்தியில், எருமைப்பாலின் பங்களிப்பு 45 சதவீதமாகவும், பசும்பாலின் பங்களிப்பு 52 சதவீதமாகவும், வெள்ளாட்டு பாலின் பங்களிப்பு 3 சதவீதமாகவும் உள்ளது. உற்பத்தி செய்யப்படும் மொத்தபாலில், 50 சதவீதம் நாம் தினந்தோறும் அருந்துவதற்கும் எஞ்சியுள்ள 50 சதவீதம் பால் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இதில் நெய் உற்பத்தி செய்ய 33 சதவீதமும், தயிர் உற்பத்தி செய்ய 7 சதவீதமும், பால்கோவா உற்பத்தி செய்ய 7 சதவீதமும், பனீர் உற்பத்தி செய்ய 3 சதவீத பாலும் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் பால் சார்ந்த தொழில்கள் மூலம் ஆண்டிற்கு ரூபாய் 9,95,215 கோடியளவிற்கு வர்த்தகம் நடைபெறுகிறது.

இன்று நம் நாட்டில், ஆண்டுக்கு 230.6 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டு, உலக அளவில் முதலிடத்தில் உள்ளோம். ஆனால் 1950களில், நமது நாட்டின் பால் உற்பத்தி வெறும் 17 மில்லியன் டன் மட்டுமே. இந்த மாற்றம் யாரால், எப்படி சாத்தியப்பட்டது என ஆராய்ந்தால் அதற்கான விடை டாக்டர் வர்கீஸ் குரியன்.


வர்கீஸ் குரியன் 1921ம் ஆண்டு நவம்பர் 26 அன்று கேரளாவின் கோழிக்கோட்டில் பிறந்தார். தமது பள்ளிக்கல்வியை, ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்திலுள்ள டைமண்ட் ஜுப்லி மேல்நிலைப் பள்ளியில் முடித்தார். சென்னை லயோலா கல்லூரியில் இளங்கலை இயற்பியல் பட்டம் (1940) பெற்றார். அதன் பின்னர் கிண்டி பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் இளங்கலை பட்டம் (1944) பெற்றார். இந்திய அரசின் கல்வி உதவித் தொகைப்பெற்று, அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் முதுகலை பட்டம் (1948) பெற்றார். இதனையடுத்து 1949ம் ஆண்டு; குஜராத் மாநிலம் 'ஆனந்த்' என்ற சிற்றூரில், அரசு பாலேடு மையத்தில் பணியமர்த்தப்பட்டார். ஆனால் அப்பணியில் அவருக்கு அவ்வளவாக நாட்டமில்லை.

அதே காலகட்டத்தில், குஜராத் மாநிலத்திலுள்ள கைரா மாவட்டத்தில், சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் ஆணைக்கேற்ப, திருபுவன்தாஸ் பட்டேல் அவர்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை தோற்றுவித்து நடத்தி வந்தார். இந்த சங்கத்திற்கு முட்டுக்கட்டையாக அந்நாளில் பால் உற்பத்தி தொழிலில் கோலோச்சிய வெளிநாட்டு நிறுவனமான 'போல்சன்' இருந்து வந்தது. அந்த சமயத்தில் திருபுவன்தாஸ் பட்டேல், வர்கீஸ் குரியன் அவர்களை சந்தித்து தமது பால் உற்பத்தியாளர் சங்க செயல் பாட்டிற்கு உதவுமாறு கேட்டுக் கொண்டதன் பேரில், தமது அரசுப் பணியைத் துறந்தார்.

வர்கீஸ் குரியன், தமது அயராது உழைப்பால் குஜராத்திலுள்ள பல கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்களை உருவாக்கி, ஒன்றிணைத்து கடந்த 1955இல் 'அமுல்' (ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட்) என்ற வணிகப்பெயரை உருவாக்கினார். பின்னாளில், அன்றைய பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கேட்டுக் கொண்ட தற்கேற்ப, நாடு முழுவதும் குஜராத் மாநிலத்தில் உள்ளது போன்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த, 1965இல் தேசிய பால்வள வாரியத்தை (National Dairy Development Board) உருவாக்கினார். அதன் மூலம் 1970 முதல் 1996 வரை வெண்மைப் புரட்சி திட்டம் மூன்று கட்டங்களாக இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டது.

வெண்மைப் புரட்சியின் முதல் கட்டத்திற்கு ஐரோப்பிய பொருளாதார சமூகம் (European Economic Community) நிதி வழங்கியது. மூன்றாம் கட்ட இறுதியில், வெண்மை புரட்சி முறையாக செயல்பட்டதன் விளைவாக, இந்தியா பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.

ஆனந்த் நகரில் உருவாக்கப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமானது பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் விற்பனை இவை மூன்றையும் இடைத்தரகர்கள் இல்லாமல் தாமாகவே கையாண்டது, இந்த ஆனந்த் மாதிரி வகையான கூட்டுறவு சங்கங்கள் நாடு முழுவதும் வெண்மைப்புரட்சியின் முதலாம் காலகட்டத்தில் (1970-81) உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் மூன்று அடுக்காக, அதாவது கிராம அளவிலான உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கமாகவும், மாவட்ட அளவிலான கூட்டுறவு ஒன்றிய மாகவும், மாநில அளவிலான கூட்டுறவு இணையமாகவும் ஏற்படுத்தப்பட்டு வெண்மைப்புரட்சியின் இரண்டாம் காலகட்டத்தில் (1981-85) செயல்படுத்தப்பட்டது.




இறுதியாக, மூன்றாம் கட்டத்தில் (1985-96) பால் உற்பத்தி கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது. புதிய பால் பொருள்கள் தயாரித்தல் பற்றிய ஆராய்ச்சியும் அவற்றை சந்தைப்படுத்துதல் குறித்த பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. பெருநகரங்களில் பால் தட்டுப்பாடு ஏற்படாதவாறு தேசியஅளவில் 'பால்வழிப் பாதை' உருவாக்கப்பட்டது.

வெண்மைப் புரட்சியின் காரணமாக, கடந்த 1998ம் ஆண்டு முதல் தொடர்ந்து பால் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்த வெண்மைப் புரட்சித் திட்டம், ஊரக வளர்ச்சிக்கான மிகப்பெரிய திருப்புமுனையாக உலகளவில் இன்றளவும் பார்க்கப்படுகிறது. 1950களில் இந்தியாவின் பால் தேவையை ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்பவுடரைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

இதே நிலை நீடித்தால், நமது கிராமப்புற பால்பண்ணைத் தொழில் நசிந்துவிடும் என நினைத்த வர்கீஸ் குரியன், கிராம பொருளாதாரத்தை மீட்டு எடுக்க, பால்உற்பத்தியில் தன்னிறைவு பெற, அவர் உருவாக்கிய அகிம்சை வழி ஆயுதம்தான் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமாகும்.

வர்கீஸ் குரியன், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கியதன் நோக்கமே கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதுதான். அன்றைய கால கட்டத்திலேயே பெண்கள் சுயசார்புடன் வாழ்வதற்கு ஏதுவாக கால்நடை வளர்ப்பில் பெரும்பங்கு வகிக்கும் கிராமப்புற மகளிரை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து, பொருளாதார சுதந்திரம் பெற காரணமாக இருந்தார். இதன் மூலம் சமூக தொழில்முனைவோராக பால் உற்பத்தியாளர்கள் உருபெற்றனர்.




வர்கீஸ் குரியன் அவர்களின் அயராத பணியால் பத்மஸ்ரீ, பத்மபூன், பத்மவிபூன், மகசேசே விருது, உலக உணவு விருது என பல விருதுகள் அவரை வந்தடைந்தன. கிராமப்புற பால் உற்பத்தியாளர் பொருளாதார நலனுக்காக அறுபது ஆண்டு களுக்கும் மேலாக அயராது உழைத்தார். இவர் கடந்த 09.09.2012ல் தமது 91வது வயதில் காலமானார்.

வர்கீஸ் குரியன் வாழ்க்கை நமக்கு கற்றுக் கொடுக்கும் பாடமானது, தனி மனிதன் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும், தேசப்பற்றுடனும் செயல்படும்போது, அந்த நாட்டில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் என்பது சாத்தியமே.

தகவல் : **முனைவர் கோ.இராஜராஜன், இணைப் பேராசிரியர், முனைவர் சி.மணிவண்ணன், முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை - 642 205 திருப்பூர் மாவட்டம்.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com